# வகுப்பு - 8
# தமிழ் இரண்டாம் தாள் (BT)

## மாதிரி வினாக்கள்

### வினா 1

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | நோய்களை அகற்றி நலவாழ்வு பெறும் வழிமுறைகளை அறிந்து வெளியிடுகிறார்கள். |
| **அலகு** | : | அடிப்படைப் பாடநூல் ( அலகு - 1) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | உடல் நலம் பற்றிய தெளிந்த அறிவு பெறுதல், சொற்பொழிவின் நுட்பம் அறிதல், சமூகத்துடன் தொடர்பு கொள்ளுதல். |

**Q** ''ஆசனம் ஓர் அறிமுகம்'' என்ற பாடப்பகுதியின் மூலம் யோகாசனம் பற்றி அறிந்திருப்பீர்கள். பாடப்பகுதியின் கருத்துகளை மனதில் கொண்டு "வளமான வாழ்வு பெற வருமுன் காத்தல் அவசியம்" என்ற தலைப்பில் சொற்பொழிவு ஒன்று தயாரியுங்கள். 4

### வினா 2

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | நலமான வாழ்விற்குப் பின்பற்ற வேண்டிய உணவுப் பழக்கங்களை அறிந்து குறிப்பு எழுதுகிறார்கள். |
| **அலகு** | : | அடிப்படைப் பாடநூல் ( அலகு - 1) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | இயற்கையில் கிடைக்கும் ஆரோக்கியமான உணவு வகைகளை அறிதல், வரிசைப்படுத்தி வெளியிடல். |

**Q**

- "பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்."
- "நொருங்க தின்றால் நூறு வயது வரை வாழலாம்."

இப்பழமொழிகள் உணர்த்தும் கருத்துகளை உட்கொண்டு நலவாழ்விற்கு நாம் பின்பற்ற வேண்டிய உணவுப் பழக்கவழக்கங்கள் பற்றிக் குறிப்புரை எழுதுங்கள். 3

## வினா 3

**கற்றல் அடைவு** : சொற்களின் பொருள், வாக்கிய அமைப்பு போன்ற மொழித்திறன் பெற்று எழுதுகிறார்கள்.

**அலகு** : அடிப்படைப் பாடநூல் ( அலகு - 2)

**சிந்தனைத் திறன்கள்** : பொருள் அறிதல், வாக்கியம் அமைத்து எழுதுதல்.

**Q** "சாதி களையப்பட வேண்டிய களை"

இப்பொன்மொழியில் இடம் பெற்றுள்ள 'களையப்பட' என்ற சொல்லின் பொருளை எழுதுங்கள்.

- "களையப்பட" என்ற சொல்லைப் பயன்படுத்தி வேறொரு வாக்கியம் உருவாக்குங்கள். 2

## வினா 4

**கற்றல் அடைவு** : பாடலின் நயத்தைப் பாராட்டி எழுதுகிறார்கள்.

**அலகு** : அடிப்படைப் பாடநூல் ( அலகு - 3)

**சிந்தனைத் திறன்கள்** : இயைபுச் சொற்களை இனம் காணுதல், அதன் இலக்கணம் அறிதல்.

**Q** 'அறிவியல் உலகில் கணினியம்மா!
அற்புத மின்னணுக் கருவியம்மா!
விரைவுடன் இயங்கும் விந்தையம்மா!
வினைபல செய்யும் புதுமையம்மா!"

இப்பாடலின் வரும் இயைபுச் சொற்களைக் கண்டு, அதற்கான காரணங்களைச் சுட்டுக. 2

## வினா 5

**கற்றல் அடைவு** : உடல் ஆரோக்கியத்திற்கு உடற் பயிற்சி அவசியம் என்பதை உணர்ந்து பட்டியலிடுகிறார்கள்.

**அலகு** : அடிப்படைப் பாடநூல் ( அலகு - 1)

**சிந்தனைத் திறன்கள்** : உடற்பயிற்சியின் தேவையை உணர்தல், வரிசைபடுத்தி பட்டியலிடல், மொழித்திறன் பெறல்.

**Q** உடற்பயிற்சியும் உடல்நலமும்'' என்ற தலைப்பில் உரையாற்றுவதற்குத் தேவையான கருத்துகளை வரிசைப்படுத்தி எழுதுங்கள். 3

## வினா 6

**கற்றல் அடைவு** : சமூக சீர்திருத்தவாதிகளின் ஆக்கப் பணிகளை அறிந்து வாழ்க்கைக் குறிப்பு எழுதுகிறார்கள்.

**அலகு** : அடிப்படைப் பாடநூல் ( அலகு - 2)

**சிந்தனைத் திறன்கள்** : குறிப்பு எழுதும் திறன் பெறல்

**Q** 'ஐயன்காளியின் சமூகச் சீர்திருத்தப்பணிகள்' குறித்துக் கட்டுரை எழுதுவதற்குத் தேவையான கருத்துகளைக் கேட்ட நண்பனுக்கு உதவும் வகையில் குறிப்புகள் தயார் செய்க. 5

## வினா 7

**கற்றல் அடைவு** : தமிழ்க் கலைச் சொற்களை அறிந்து எழுதுகிறார்கள்.

**அலகு** : அடிப்படைப் பாடநூல் ( அலகு - 3)

**சிந்தனைத் திறன்கள்** : ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுதல்.

**Q** "நெட்டும் டாட்காமும்
ஈ மெயிலும் எல்லாம்
நெருங்கிய நெருங்காத
அறிந்த அறிந்திராத
அனைத்தையும்
கணினியிலே ஒளிபரப்பி
அப்டேட் செய்திகளை
அடிக்கடித் தருகின்றது!"

இக்கவிதையில் இடம்பெறும் ஆங்கிலக் கலைச்சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுங்கள் 2

## வினா 8

**கற்றல் அடைவு** : கவிதையை வாசித்துப் பொருள் எழுதுகிறார்கள்.

**அலகு** : அடிப்படைப் பாடநூல் ( அலகு - 1)

**சிந்தனைத் திறன்கள்** : கடினச் சொற்களுக்கான பொருளை அறிதல்.

**Q** கோடிட்ட சொற்களுக்குப் பொருள் எழுதுங்கள்.

தூய்மை உடைமை துணிவும் தொழில் அகற்றும்
வாய்மை உடைமை வனப்பு ஆகும் - தீமை
மனத்தினும் வாயினும் சொல்லாமை மூன்றும்
தவத்தில் தருக்கினார் கோள் 2

## வினா 9

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | பத்திரிகை விளம்பரம் எழுதி வெளியிடுகிறார்கள். |
| **அலகு** | : | அடிப்படைப் பாடநூல் ( அலகு - 3) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | சுருங்கக் கூறுதல், கவர்ச்சிகரமாக வடிவமைத்தல், குறியீடுகள் பயன்படுத்துதல். விளம்பர உத்தியைக் கையாளுதல். |

**Q**

- கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் புத்தகக் கண்காட்சிக்கான பத்திரிகை விளம்பரம் ஒன்று தயார் செய்யுங்கள் 3
  (மதுரை - சர்வோதயா இலக்கியப் பண்ணை - புத்தகக் கண்காட்சி - தமிழ் மொழிப் புத்தகங்கள், பிறமொழிப் புத்தகங்கள் விற்பனை - காலை 9 மணி முதல் இரவு 9 மணிவரை - இடம் 33, கலைவாணர் கலையரங்கு, தியாகராஜ நகர், மதுரை - 7, போன்: 25327432. அனுமதி இலவசம். )

## வினா 10

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை உருவாக்க அறிகிறார்கள். |
| **அலகு** | : | அடிப்படைப் பாடநூல் ( அலகு - 3) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | குறியீடுகளை அறிந்து பயன்படுத்துதல், வெளியிடுதல். |

**Q** கீழ்க்காணும் வாக்கியத்தில் நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்தி எழுதுங்கள். 2
தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி கைப்பேசி கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன

## வினா 11

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | வாக்கியங்களின் அமைப்பை மாற்றி எழுதுகிறார்கள். |
| **அலகு** | : | அடிப்படைப் பாடநூல் ( அலகு - 1) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | குறியீடுகள் பயன்படுத்துவதால் சொற்களின் பொருள் மாறும் என்பதனை அறிந்து கொள்கிறார்கள். |

**Q** இன்றுமுதல், இலையில் சாப்பாடு இல்லை
இன்று, முதல் இலையில் சாப்பாடு இல்லை.

- காற்புள்ளியை மாற்றிப் பயன்படுத்தும் பொழுது ஏற்பட்டுள்ள பொருள் மாற்றத்தை எழுதுங்கள். 2

## வினா 12

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற நோக்கில் முத்திரை வாக்கியம், துண்டுப் பிரசுரம் போன்றவை தயார் செய்கிறார்கள். |
| **அலகு** | : | அடிப்படைப் பாடநூல் ( அலகு - 1) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | சமுத்துவ எண்ணம் ஏற்படுதல், மூட நம்பிக்கைகளுக்கு எதிராக செயல்படுதல், சுருக்கக் கூறும் திறன் பெறல். |

**Q** சமூகத்தின் மாற்றத்திற்கு சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சிகளாலேயே இந்த வையகம் வாழ்கிறது என்றார் அம்பேத்கர். இதுபோன்ற கருத்துக்களை மனதில் கொண்டு சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படும் வகையில் துண்டுப்பிரசுரம் ஒன்று தயார் செய்யுங்கள். 3

## வினா 13

| | | |
|---|---|---|
| **கற்றல் அடைவு** | : | மனித ஒற்றுமையை வளர்க்கும் கவிதைகள் கதைகள் போன்றவற்றை படித்து பரிந்துரை எழுதுகிறார்கள். |
| **அலகு** | : | அடிப்படைப் பாடநூல் ( அலகு - 2) |
| **சிந்தனைத் திறன்கள்** | : | வேற்றுமையில் ஒற்றுமை காணுதல், விமர்சன கண்ணோட்டம், தீர்வு காணும் திறன் போன்றவை. |

**Q** "மதத்தைச் சொல்கிறாய்
சாதியைச் சொல்கிறாய்
எப்போது
மனிதன் என்று நீ
சொல்லப் போகிறாய்"

மு. மேத்தாவின் இக்கவிதை வரிகளை வாசித்து மனிதனாக வாழ்வதற்கு வேண்டிய வழிமுறைகளை பரிந்துரையாக எழுதுங்கள். 3